| அரையாண்டுத் தேர்வு - 2025 | தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

**காலம் : 2.30 மணி** **எட்டாம் வகுப்பு - சமூக அறிவியல்** **மதிப்பெண் : 100**

## பகுதி - 1

**I.** *1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* ***(14x1=14)***

*2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.*

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?
   அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்
   இ) அல்போன்சோ- டி-அல்புகர்க் ஈ) பிரான்சிஸ்கோ-டி.அல்மெய்டா
2. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?
   அ) சர்தார் வல்லபாய் பட்டேல் ஆ) மகாத்மா காந்தி
   இ) திகம்பர் பிஸ்வாஸ் ஈ) கேசப் சந்திர ராய்
3. யாருடைய ஆட்சியின் போது சீனத்துறவி யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார்?
   அ) இரண்டாம் சந்திரகுப்தர் ஆ) மகேந்திர பல்லவன்
   இ) முதலாம் நரசிம்ம பல்லவன் ஈ) ஹர்ஷ வர்த்தனர்
4. பழங்கால நகரங்கள் எனப்படுபவை
   அ) ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ ஆ) டெல்லி மற்றும் ஹைதரபாத்
   இ) பம்பாய் மற்றும் கல்கத்தா ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
5. உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்
   அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5
6. புவியில் உள்ள நன்னீரின் சதவிகிதம்
   அ) 71% ஆ) 97.20% இ) 2.80% ஈ) 0.60%
7. இந்தியப் பெருங்கடலில் சுனாமி ———ஆம் ஆண்டில் ஏற்பட்டது
   அ) 1990 ஆ) 2004 இ) 2005 ஈ) 2008
8. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ———
   அ) கேப் பிளாங்கா ஆ) அகுல்காஸ் முனை
   இ) நன்னம்பிக்கை முனை ஈ) கேப் டவுன்
9. அவசர காலத்தில், அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண் ———
   அ) 108 ஆ) 100 இ) 106 ஈ) 101
10. 1995ம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் ———இல் கூடினர்
    அ) பெய்ஜிங் ஆ) நியூயார்க் இ) டெல்லி ஈ) எதுவுமில்லை
11. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?
    அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
    இ) முதலமைச்சர் ஈ) இந்திய தலைமை நீதிபதி
12. உலோகப் பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டது?
    அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வெண்கலம் ஈ) மேற்கூறிய அனைத்தும்
13. ***சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்***
    **கூற்று:** ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்
    **காரணம்:** அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்
    அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
    இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
    ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை
14. ***கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும் காரணத்தையும் ஆராய்க***
    **கூற்று:** நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்
    **காரணம்:** கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம்பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல
    அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
    ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
    இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஈ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**II** ***கோடிட்ட இடங்களை நிரப்புக.*** ***(6x1=6)***

15. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் ———.
16. ——— தமிழர்களால் 'வீர மங்கை' எனவும் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அறியப்பட்டார்.
17. ——— என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்.
18. அட்லஸ் மலை ——— கண்டத்தில் அமைந்துள்ளது.



Scanned with OKEN Scanner

19. ஆளுநரின் பதவிக்காலம் _______ ஆண்டுகள் ஆகும்.
20. நிகழ்நிலை வங்கியை _______ என்று அழைக்கலாம்.

**III. பொருத்துக. (பகுதி அ)** **(10x1=10)**

| | | |
|---|---|---|
| 21. மதுரை | - | சமூகச் சீர்திருத்தவாதி |
| 22. தாதாபாய் நௌரோஜி | - | வரிக்கோட்டு பாதை |
| 23. இலவச, கட்டாயக் கல்வி | - | பண்டைய நகரம் |
| 24. இராஜாராம் மோகன்ராய் | - | செல்வச் சுரண்டல் கோட்பாடு |
| 25. பாதசாரி | - | 6-14 வயது வரை |

**பொருத்துக. (பகுதி ஆ)**

| | | |
|---|---|---|
| 26. ஈரநிலைமானி | - | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 27. மனிதனால் உருவாக்கப்படும் இடர் | - | 1935 |
| 28. நெருப்புக் கோழி | - | ஈரப்பதம் |
| 29. பண்டமாற்று முறை | - | தீவிரவாதம் |
| 30. இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் | - | பறக்க இயலாத பறவை |

**IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.** **(5x1=5)**

31. பிளாசிப் போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் அரசியல் ஆதிக்கம் பெற்றனர்.
32. 1799 அக்டோபர் 16ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
33. ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி அனிராய்டு அழுத்தமானி ஆகும்.
34. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.
35. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.

## பகுதி - 2

**V. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.(ஏதேனும் 7 மட்டும்)** **(7x2=14)**

36. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.
37. செல்வச் சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக.
38. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
39. அண்டார்டிகா கண்டத்தின் தன்மை குறித்து எழுதவும்.
40. கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கிய காரணங்கள் யாவை?
41. மண்வளப் பாதுகாப்பு என்றால் என்ன?
42. சமயச் சார்பின்மையின் நோக்கங்களைக் கூறுக.
43. இந்தியக் குடிமகனாவதற்குரிய ஐந்து வழிமுறைகளை எழுதுக.
44. போக்குவரத்து சமிக்ஞைகளின் விளக்குகளின் படம் வரைந்து அதன் பொருளைக் குறிப்பிடு.
45. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

## பகுதி - 3

**VI. விரிவான விடையளி. (ஏதேனும் 7 மட்டும்)** **(7x5=35)**

46. ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?
47. இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது எப்படி?
48. 1857ம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
49. தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப் படம் மூலம் விளக்குக.
50. பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்.
51. **i) வேறுபடுத்துக:** 1) காலநிலை மற்றும் வானிலை
2) இயற்கை இடர்கள் மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் இடர்கள்
**ii) காரணம் கூறு:**
எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுகிறது ஏன்?
52. சாலை விபத்துகளுக்கான காரணங்களை விவரி.
53. சமயச்சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?
54. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
55. பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக.

## பகுதி - 4

**VII. பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.** **(8x1=8)**

56. 1) அஸ்ஸாம் 2) பம்பாய் 3) வாரணாசி 4) சென்னை
5) லக்னோ 6) டெல்லி 7) பிளாசி 8) கல்கத்தா

**VIII. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.** **(8x1=8)**

57. 1) ஓசியானியா 2) பாரிஸ் 3) இலண்டன் 4) கெய்ரோ
5) மெக்சிகோ நகரம் 6) இலத்தீன் அமெரிக்கா
7) குளிர் மண்டலம்(உறைப்பனி மண்டலம்) 8) டோக்கியோ



Scanned with OKEN Scanner